விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 075 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 20 புதன்கிழமை (04.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே




## மத்திய கிழக்கில் தொடரும் போர்ப் பதற்றம்

- ஈரான் மீதான தாக்குதலில் 787 பேர் உயிரிழப்பு.
- உலகமெங்கும் கச்சாய் எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

(04ஆம் பக்கம் பார்க்க)

அணு ஆயுதத் தயாரிப்பில்

## ஈரான் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை

ரஷ்யா தெரிவிப்பு



(மொஸ்கோ)

ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து 15ஆம் பக்கம் பார்க்க

மத்திய கிழக்கில் உள்ள

## அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவிப்பு

(வோஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளை உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர் காயம்

(ரெல் அவிவ்)

இஸ்ரேலில் பணிபுரியும் 15ஆம் பக்கம் பார்க்க

## பிரதம நீதியரசர் மன்னார் விஜயம்

(மன்னார்)

இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உத்தியோக பூர்வ பயணமாக நேற்றுச் 15ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையில் எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்படாது


பாராளுமன்றில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



- ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது.
- இம்மாதம் எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையும்.
- எரிவாயு நெருக்கடி தற்காலிகமானது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## 205 விமான சேவைகள் இலங்கையில் இரத்து



(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் மோதல்கள் காரணமாக இதுவரை மொத்தம் 205 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ள 15ஆம் பக்கம் பார்க்க

யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

## நீதி கிடைக்க இலங்கை அரசு ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும்

ஐ.நாவில் விசேட அறிக்கை சமர்ப்பிப்பு



(ஜெனிவா)

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க இலங்கை ஆக்கபூர்வ மாகச் செற்பட வேண்டும் என ஐ.நாவில் விசேட அறிக்கை 04ஆம் பக்கம் பார்க்க

மத்திய கிழக்கில் உள்ள

## பொருளாதார மையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்

ஈரான் எச்சரிக்கை



(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கத் தாக்குதல்கள் தொடருமானால், மத்திய கிழக்கில் உள்ள அனைத்து 15ஆம் பக்கம் பார்க்க

வடமராட்சி கிழக்கில்

## மாட்டுடன் இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் மாட்டுடன் இருவர் நேற்று முன்தினம் (2) 15ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணத்தில் இரு நாட்களில்

## 3 இலட்சத்து 70 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் உள்ள 43 எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் இரு நாட்களில் 3 லட்சத்து 70 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு வழமையாக நாள் ஒன்றிற்கு 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 . 02 . 1965

மறைவு
15 . 03 . 2025

## அமரர் மகேசன் மாதவன்

(பொறியியலாளர்)

எங்கள் மாதவத்து
மாதவன் மறைந்து
ஆண்டுகள் ஒன்று ஆனது!
நீள்கின்ற அவர் நினைவுகள்
இதயத்தில் பொங்கி எழுகிறது!
வானவர் உலகில்
சோதியாய் சுடராய் இருந்து
எம்மைக் காத்தருளுங்கள் – அப்பா
ஆண்டு ஒன்றில் உங்கள் ஆத்மா
ஆதியும் அந்தமுமில்லா
சோதியில் உறைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## திருமதி ஜீன்ஜீவிதா கிறேஷியன் மொறிஸ்

ஆசிரியர், B.Ed(Social science), MEd, SLTS 2 - I

யாழ். பல்கலைக்கழக 40 வது பட்டமளிப்பு விழாவில் கல்வியியலில் முதுமாணிப்பட்டம் பெற்ற எமது பாடசாலையின் சக ஆசிரியரான ஜீன் ஜீவிதா கிறேஷியன் மொறிஸ் அவர்களுக்கு எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் மென்மேலும் பல பட்டங்களைப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**

(6974)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **ஜெயப்பிரியா பத்மநேசன்**
அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் நடராசா யோகராசா

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மண்ணில்
28.07.1945


விண்ணில்
01.03.2026

(C-5111)

பாடசாலை நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 05.02.2026 ஆம் திகதி வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் தாமோதரம்பிள்ளை கணேசலிங்கம் (கணேஸ்)

(பழமுதிர்ச்சோலை உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(05.03,2026) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் வேலணை சாட்டி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று (07.03.2026) சனிக்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பின்னர் மதிய போசன நிகழ்வு ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் (345, கோவில் வீதி, நல்லூர்) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 983 6081

(6960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹபரணை - பொலன்னறுவை வீதியில் விபத்து

### பத்துப் பேர் காயம்



(கொழும்பு)

ஹபரணை - பொலன்னறுவை வீதியின் மின்னேரிய பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பத்து பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று, மற்றொரு பேருந்துடனும் நெல் அறுவடை இயந்திரத்தைக் கொண்டு சென்ற உழவு இயந்திரத்துடனும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் பேருந்துகளில் பயணித்த ஏழு பேர் உட்பட 10 பேர் காயமடைந்து ஹபரணை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக இருந்தமையால், அவர் தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மத்திய கிழக்கில் போர் பதற்றம்

# எரிபொருள், எரிவாயு விலைகள் உலக சந்தையில் உயர்வு

**(வோஷிங்டன்) ............................ மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் தீவிர போர் பதற்றங்களுக்கு மத்தியில், உலகளாவிய எரிசக்தி சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் விலைகள் பாரிய உயர்வைச் சந்தித்துள்ளன.**

நேற்றைய தின உலகளாவிய எரிசக்தி சந்தை நிலவரப்படி, WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72.65 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அதேவேளை, சர்வதேச ரீதியில் அதிகம் பயன்படுத்தப்படும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.64 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

மசகு எண்ணெயைத் தொடர்ந்து, இயற்கை எரிவாயுவின் விலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, அதன் விலை 3.002 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி)

## வெளிநாட்டு தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், உயர்ஸ்தானிகரகங்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் தங்கியுள்ள இடங்களுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கு அமைய, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களை கருத்திற்கொண்டு, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் மற்றும் போராட்டங்கள் ஏற்படக் கூடும் என்ற அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அதன்படி, பொலிஸ் துறையினரின் ரோந்து நடவடிக்கைகளையும் 24 மணித்தியாலங்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏப்ரல் 1 முதல் TIN சான்றிதழ் கட்டாயம்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 2026 ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், முக்கியமான பல நிதி மற்றும் பொதுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வரி செலுத்துவோர் TIN சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் இந்த புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

புதிய சட்டத்தின்படி, பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது செல்லுபடியாகும் TIN சான்றிதழை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்:

நிதி நிறுவனங்களில் ஏதேனும் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்தல், கடனட்டைகளை பெற்றுக்கொள்ளுதல், காணிகளைப் பதிவு செய்தல் அல்லது காணி உரிமையை உறுதிப்படுத்துதல், கட்டடத் திட்டங்களுக்கான உத்தியோகபூர்வ அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல், மோட்டார் வாகன வருமான வரி அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல், புதிய வணிகங்களைப் பதிவு செய்தல், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை கைமாற்றுதல்.

வர்த்தமானி அறிவித்தலின்படி, வங்கி மேலாளர்கள், பதிவாளர்கள், மாகாண அல்லது பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட அதிகாரிகள், தத்தமது சேவைகளை வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரரின் TIN சான்றிதழை சரிபார்க்க வேண்டியது கட்டாயமாகும்.

வரி செலுத்தும் முறையை முறைப்படுத்துவதற்காகவும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## தொடரும் போர் பதற்றம் விமான சேவைகள் நேற்றும் இரத்து

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 57 விமான சேவைகள் நேற்றைய தினமும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, நாட்டிலிருந்து வெளியேறவிருந்த 28 விமானப் பயணங்களும், நாட்டிற்கு வருகை தரவிருந்த 29 விமானப் பயணங்களும் நேற்று இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இன்றும் 4 விமானப் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மத்திய கிழக்கிற்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் விமானங்கள், அதே போன்று அந்தப் பிராந்தியத்தின் ஊடாக ஏனைய இடங்களுக்குப் பயணிக்கும் விமானங்கள் தொடர்ந்தும் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கப்டன் தமிந்த ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எனினும், நேற்றுக் காலை சில விமானப் பயணங்கள் மாத்திரம் அந்தப் பிராந்தியத்தின் ஊடாகப் பயணித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மத்திய கிழக்கு போரை நிறுத்த உலக நாடுகள் தலையிட வேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை



(கொழும்பு)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழல் உலக நாடுகளுக்கு பெரும் சவாலாக மாறியுள்ள நிலையில், இந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச நாடுகள் தலையிட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மத்திய கிழக்கில் போர் மூண்டுள்ள நிலையில், அதன் நேரடித் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் தட்டுப்பாடு குறித்த அச்சம் காரணமாக நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசைகள் உருவாகியுள்ளன. இந்தப் போர் நிலைமை விரைவில் முடிவுக்குவரவேண்டும் அதனை உறுதிப்படுத்த ஏனைய உலக நாடுகள் உடனடியாகத் தலையிட்டு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கை என அவர் தெரிவித்தார். (நி)

ARSS INTERNATIONAL
No.188, K.K.S Road, Chunnakam.
A/L 2028
கணித விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
ஆரம்பம் : 06.03.2026 (வெள்ளிக்கிழமை)

| | |
|---|---|
| Biology<br>திரு.S.நித்தியானந்தன் (B.Sc, PGDE, M.Ed) | Com.Maths<br>திரு.M.கோணேஸ்வரா (B.Sc, PGDE, M.Ed) |
| Chemistry<br>திரு.S.சிவசங்கர் (B.Sc, PGDE) | Physics<br>திரு.V.பார்த்தீபன் (B.Sc, PGDE) |

A/L 2027, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
10 வருடங்களுக்கு மேலான தேசிய உயர்தர பரீட்சை மதிப்பீட்டில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
(C-5104)
தொடர்புகளுக்கு : 0768976665 , 0772568522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி கிடைக்க...

ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான முக்கிய குழு (பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டெனேக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா) சார்பில் விசேட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைப் பிரித்தானியாவின் மனித உரிமைகள் தூதுவர் எலினோர் சாண்டர்ஸ் முன்வைத்தார்.

குறித்த அறிக்கையில்,

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை (PTA) நீக்க வேண்டும் அல்லது அதனைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை தொடர்பான முக்கிய குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்புச் சட்டம்" முந்தைய சட்டத்தை விடவும் பாரிய கவலைகளைத் தோற்றுவிப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைப் பொறுப்புகளுக்கு இணங்க இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேநேரம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வலுவான மற்றும் சுயாதீனமான உள்நாட்டு நிறுவனங்கள் அவசியம் எனச் சுட்டிக்காட்டிய தூதுவர், திட்டமிடப்பட்டுள்ள சுயாதீன அரச வழக்குத்தொடுநர் அலுவலகம் வெறும் பேச்சளவில் இன்றிச் செயற்பாட்டுக்கு வர வேண்டும் என வலியுறுத்தினார்.

இறுதியாக மோதல் காலங்களில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) அறிக்கையை ஏற்றுக்கொண்ட முக்கிய குழு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டன. (ம-7)

## மத்திய கிழக்கில்...

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய கூட்டுத்தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா காமேனி கொல்லப்பட்டமையால்,

கோபம் அடைந்த ஈரான் இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகள் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தி பதிலடி கொடுத்து வருகிறது. வளைகுடாப் பகுதிகளில் உள்ள எண்ணெய் வயல்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதால் உலகமெங்கும் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்களால் ஈரானுக்கு இதுவரை ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த விபரங்களை ஈரான் செஞ்சிலுவைச் சங்கம் புதுப்பித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களால் 787 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களில் 176 பேர் சிறுவர்கள் எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சமீபத்திய தாக்குதல்களால் நாடு முழுவதும் குறைந்தது 153 நகரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு இலக்கான மொத்த இடங்களின் எண்ணிக்கை 504 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவான தாக்குதல்களின் எண்ணிக்கை 1,039 ஆக அதிகரித்துள்ளது.

மீட்புப் பணியாளர்கள் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் இடிபாடுகளை அகற்றுதல், காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு மாற்றுதல் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஈரான் பேச்சுவார்த்தைக்கு முற்பட்டதாகவும் தான் அதற்கு "Too Late" எனப் பதில் அளித்ததாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அவர் சமூக வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது தாக்குதலில் அவர்களுடைய விமானப் பாதுகாப்பு, விமானப்படை, கடற்படை பலத்த சேதமடைந்துள்ளது. தலைமைத்துவமும் போய் விட்டது.

எனவேதான் அவர்கள் பேச விரும்புகிறார்கள். நான் அதற்கு Too Late என்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கையில்...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்படாது. இலங்கையில் அடுத்த 33 நாட்களுக்கு போதுமான டீசல் மற்றும் அடுத்த 27 நாட்களுக்கு பெற்றோல் கையிருப்பில் உள்ளது.

மார்ச் 07 அல்லது 08 ஆம் திகதிகளில் 35,000 தொன் பெற்றோல் கொண்ட எண்ணெய் டேங்கர் இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேமிப்பு இருப்பு மற்றும் தற்போதுள்ள எரிபொருள் இருப்புகளின் அடிப்படையில் கப்பல்கள் கொண்டு வரப்படுகின்றன.

ஆர்.எம். பார்க்ஸிலிருந்து எரிபொருள் கொண்ட ஒரு கப்பல் மார்ச் 14 ஆம் திகதியும் சினோபெக்கிலிருந்து மார்ச் 14 ஆம் திகதியும் இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐ.ஓ.சி) மார்ச் 21 ஆம் திகதியும் சிலோன் பெற்றோலியம் கார்ப்பரேஷனிலிருந்து மார்ச் 28 ஆம் திகதியும் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துக் கப்பல்களும் ஏற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது எரிபொருள் பற்றாக்குறை இல்லை. இருப்பினும் போர் தீவிரமடைந்தால், அரசாங்கம் அதற்கேற்ப பிரச்சினைகளைக் கண்காணித்துத் தீர்க்க வேண்டும் என்றார்.

மேலும் எரிவாயு நெருக்கடி குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

மத்திய கிழக்கில் தற்போதைய மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் விரைவில் அமைதியான தீர்வுக்கு பங்களிக்க வேண்டும் என்று இலங்கை எதிர்பார்க்கிறது. ஏனெனில் இது இலங்கை உட்பட முழு உலகின் பொருளாதாரத்தையும் போர் பாதிக்கிறது.

நாட்டில் அதிகபட்சமாக ஒரு வார காலத்திற்கு மாத்திரமே எரிவாயுவைச் சேமித்து வைக்க முடியும்.

எதிர்காலத்தில் எரிவாயு நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு எனத் தெரிவித்தார். மார்ச் 12ஆம் திகதியளவில் ஒரு இலட்சம் புதிய எரிவாயு சிலிண்டர்களுடன் கப்பல் ஒன்று நாட்டிற்கு வரவுள்ளதாகவும் கூறினார்.

நாம் எதிர்கொள்ளும் ஒரு விசேட பிரச்சினை எரிவாயுப் பிரச்சினை. எமது முழுமையான சேமிப்புத் திறன் 8,000 மெட்ரிக் தொன்களாகும். லிட்ரோ நிறுவனத்தின் எமது தினசரி எரிவாயு தேவை 1,000 முதல் 1,200 மெட்ரிக் தொன்களுக்கு இடைப்பட்டதாகும். எம்மால் அதிகபட்சமாக ஒரு வாரத்திற்கு மாத்திரமே எரிவாயுவைச் சேமிக்க முடியும். எனவே கையிருப்பு முடியும் வரை காத்திருந்து எரிவாயுவைக் கொண்டுவர முடியாது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 8,000 மெட்ரிக் தொன் வீதம் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இதுதான் நிலைமை. இதனை மாற்ற வேண்டும்.

தற்போதும் மாலைதீவில் கப்பல் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது. அந்தக் கப்பலில் இருந்து சிறிய கப்பல்கள் மூலம் 8,000 மெட்ரிக் தொன் வீதம் கொண்டு வரப்படுகிறது. இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். லிட்ரோ எரிவாயு ஒரு இலட்சம் புதிய சிலிண்டர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. மார்ச் 12ஆம் திகதி அந்தக் கப்பல் வருகிறது. ஏனெனில் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவியது. மஞ்சள் நிற சிலிண்டர் வைத்திருப்பவர்கள் நீல நிறத்திற்கு மாற விரும்பினர். ஆனால் போதிய சிலிண்டர்கள் இல்லை. இப்படியேதான் இதனைச் சரிசெய்கிறோம். எரிவாயுத் தட்டுப்பாடு என்று கூச்சலிட்டார்கள். முதலில் இந்த நெருக்கடியைப் புரிந்துகொள்ளுங்கள்.

8,000 மெட்ரிக் தொன் சேமிப்புத் திறன் இருந்தும் லிட்ரோவால் 1,000 - 1,200 வரை வழங்க முடியுமான நிலையில் திடீரென தேவை 1,800 ஆக அதிகரித்தால், எஞ்சியுள்ள கையிருப்பை 5 நாட்களுக்கும் குறைவாகவே வழங்க முடியும். அப்போது ஒரு நெருக்கடி ஏற்படலாம். அந்த நெருக்கடிக்குத் தீர்வுகளைக் காண முடியும் என்றார். (ம-7)

# வடக்கின் போர் நாளை ஆரம்பம்!





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான "வடக்கின் போர்" என்றழைக்கப்படும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. 119ஆவது முறையாக நடத்தப்படவுள்ள குறித்த போட்டியானது 2026 மார்ச் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

தொடர்ந்து, 23ஆவது மட்டுப்படுத்தப்பட்ட பந்து வீச்சுக்கான (50 ஓவர்கள்) போட்டி 2026 மார்ச் 14ஆம் திகதியன்று புனித பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட முதலாவது வடக்கின் போர் 1904 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

இதுவரை இடம்பெற்ற 118 போட்டிகளில், புனித பரியோவான் கல்லூரி 40 போட்டிகளிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 29 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

அத்துடன், 41 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தன.

மேலும், 07 போட்டிகளுக்கான முடிவுகள் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் ஒரு போட்டி இடையில் கைவிடப்பட்டது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனொளிபாதமலை வனப்பகுதிகளில் தீ விபத்து

(ஹற்றன்)

மஸ்கெலியாவில் உள்ள கிளேன்டில் தோட்டத்தில் உள்ள ஒரு வனப் பகுதியிலும், கார்ட்மோர் சொந்தமான சிவனொளி பாத மலை வனப்பகுதியின் மலைத் தொடரிலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

கடும் வரட்சியான வானிலை மற்றும் அந்தப் பகுதியைப் பாதிக்கும் காற்று காரணமாக, தீ சுற்றியுள்ள பகுதிகளுக்கு வேகமாக பரவி வருகிறது.

இந்த நாட்களில் தோட்டத்தின் பல இடங்களில் இது போன்ற தீ விபத்துகள் அதிக அளவில் பதிவாகி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சூழ்நிலை காரணமாக, பல உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் மண்டலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ள நீர் ஆதாரங்கள் வறண்டு போகும் அபாயம் உள்ளது.

மத்திய மலைநாட்டில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தீயில் சிக்கிக் கொள்வது எதிர் காலத்தில் கடுமையான நீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர். மாணிக்கவாசகர் மனோரஞ்சிதமலர்



பாசத்தின் உறைவிடமே
பணிவின் ஒளி விளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக்களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ?
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள் தேற்ற
மொழியின்றி தவிக்கின்றதே - உம்
உறவினை தேடி துடிக்கின்றதே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 1949.05.28

மறைவு 2026.01.19

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

பிரிவால் துயருறும்
ரமணண் மஞ்சுளா-மகள் (ஜேர்மனி)
(ராதா)

(6965)

---

# இராசிபலன்

04.03.2026
மாசி 20 புதன்கிழமை
பிரதமை பிற்பகல் 5.37 மணிவரை
பூரம் முற்பகல் 8.19 மணிவரை

சுப நேரம் 4.56-6.26மணிவரை
இராகு காலம் 12.26-1.56மணிவரை
திருவள்ளுவர் குருபூஜை

சந்திராஷ்டமம்
அவிட்டம்.

வளவன்

**மேஷம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்** பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**துலாம்** புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் விரயங்கள் மேலோங்கலாம்.

**மகரம்** குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற் படும் நாள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்** மனதில் இனம்புரியாத குழப்பம் தோன்றி மறையும், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, பயணங்களின் போது பிரிய மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த்தொடர்புகள் நன்மை தரும்.

**கன்னி** புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களின் உதவியுண்டு.

**மீனம்** உறவினர் வழியில் மனத்திற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும்.

பிழையை சரிபடுத்திக்கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரமதானம்

(கரணவாய்)

வட பிராந்திய சத்தியசாயி நிறுவகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை இணைந்து மேற்கொண்ட சிரமதானப் பணி மணல்காடு கடற்கரையில், அண்மையில் இடம்பெற்றது.

குறித்த சிரமதானத்தின் மூலம் கடற்கரையில் காணப்பட்ட அதிகளவான பிளாஸ்ரிக் கழிவுகள் உட்பட பல்வேறு கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபையால் அகற்றப்பட்டன. (8-60)

# வீதி மின்விளக்குகள் வழங்கல்

(கரணவாய்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, பருத்தித்துறைப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சற்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 55 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 வீதி மின்விளக்குகள் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரால் வழங்கி வைக்கப்பட்டது. (8-60)

# விவசாயிகளுக்கு கொள்கலன்களில் எரிபொருள் வழங்கப்படும்

## ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையம்

(சாவகச்சேரி)

**மீனவர்கள் மற்றும் விவசாயிகள், கிராம அலுவலருடைய உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வருகைதரும் பட்சத்தில் அவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கான எரிபொருட்கள் கொள்கலன்களில் வழங்கி வைக்கப்படும் என நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வருகின்ற பதற்ற நிலைமையால் இங்குள்ள மக்கள் எரிபொருள் கொள்வனவில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

இதனால் விவசாயம், கடற்றொழில் போன்ற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் அதேநேரம் ஜெனரேட்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்துபவர்களும் கொள்கலன்களில் எரிபொருட்களை பெற தயக்கம் காட்டுகின்றனர். இதனால் அவர்களுடைய தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன.

எனவே அவர்களுடைய தொழில் நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு நுணாவிலில் அமைந்துள்ள எமது ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக அவர்களுடைய தொழில் நடவடிக்கைக்கு தேவையான எரிபொருட்களை கொள்கலனில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனவே உரிய தொழில்களில் ஈடுபடுபவர்கள் கிராம அலுவலருடைய உறுதிப்படுத்தல் கடிதத்தோடு எமது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொள்கலனில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியும்.

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மாத்திரமின்றி ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் உரிய ஆதாரத்தோடு எரிபொருள் கொள்வனவில் ஈடுபடலாம் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (8-30)

# ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு மணல், கற்குவியல், மண்வெட்டி, சவள், கத்தி என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# பிரஜாசக்தி குழுவின் கலந்துரையாடல்

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கிழக்கு முள்ளியான் மற்றும் கேவில், போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவின் பிரஜாசக்தி குழுவின் முதலாவது கலந்துரையாடல் அண்மையில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கட்டைக் காட்டில் அமைந்துள்ள முள்ளியான் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது உள்ளக வீதி புனரமைப்பு, விவசாய ஊக்குவிப்புகள், வைத்தியசாலை மேம்படுத்தல், மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலைக்கான குடிநீர் வசதிகள், விளையாட்டு மைதானம், கல்வி, மின்சாரம், போன்ற பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலின் இறுதியில் பிரஜாசக்தி குழு உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (8-60)

# யாக்கரை-கப்பூது பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை




(சாவகச்சேரி)

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கை மூலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் வடமராட்சி யாக்கரை-கப்பூது வெளி காட்டுப் பகுதிக்குள் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி வே.ரஷிகரன் தலைமையில் மதுவரிப் பரிசோதகர் கனநாதன் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையின் போதே மேற்படி கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன் போது 115லீற்றர் கசிப்பு, 1010லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. மீட்பு நடவடிக்கையின் போது சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-30-60)



யா/செங்குந்தா பாடசாலை வளாகம் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களால் நேற்று முன்தினம் துப்பரவு செய்யப்பட்டது.


# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 300 | 250 | 180 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 | - | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 | 250 | 300 |
| தக்காளி | 100 | 80 | 100 | 150 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 100 | 100 | 200 | 200 | 120 | 150 |
| கரட் | 300 | 400 | 400 | 350 | 350 | 320 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 | 100 | 80 |
| புடோல் | 100 | 150 | 100 | 200 | 150 | 130 |
| வாழைக்காய் | 150 | 180 | 200 | 200 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 300 | 300 | 300 | 150 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 180 | 150 | -- |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 350 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 400 | 400 | 275 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 300 | 300 | 290 |
| பீற்றூட் | 100 | 80 | 200 | 150 | 100 | 120 |
| கறிமிளகாய் | 400 | 300 | 400 | 300 | 250 | 375 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 2000 | 3000 | 2000 | -- |
| போஞ்சி | 300 | 250 | 400 | 300 | 250 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | 200 | -- | -- |
| கீரை – 1 பிடி | 120 | 80-140 | 150 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 150 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 80 | 100-160 | -- | 120 |
| இராசவள்ளி | 300 | 550 | 400 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 200 | 80 | 200 | 150 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 200 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 60 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 120 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச சமையற் கலைப் போட்டியில் ஈழத்து இளைஞன் சாதனை




அண்மையில் கிரீஸ் நாட்டில் நடைபெற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான காய்கறி மற்றும் பழங்கள் செதுக்கல் சம்பியன்ஷிப் போட்டியில், இத்தாலி நாட்டின் சார்பில் கலந்து கொண்ட ஈழத்தமிழரான ரவிராஜ் தனுராஜ் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். அத்துடன், சமையற்கலைத் துறையில் வழங்கப்படும் உயரிய கௌரவமான "கிரீஸ் குலினரி புரொபஷனல்" விருதினையும் அவர் தட்டிச் சென்றுள்ளார்.

செர்பியா நாட்டைச்சேர்ந்த சர்வ தேச சமையற் கலை ஒன்றியத்தின் உறுப்பினர் டேனியேலா பான்டிக் விலாஹோவிக் அவர்களிடமிருந்து "சிறந்த ஆளுமைக்கான அங்கீகாரத்தையும்" ரவிராஜ் தனுராஜ் பெற்றுக் கொண்டார். (8)

# வீடமைப்பு அபிவிருத்தி; கலந்துரையாடல்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள்,வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள், 2018 காலப்பகுதியில் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் நிலை உள்ளிட்ட வீடமைப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் H.P. R.கருணாதிலக, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். ள(8-316)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :-இராசதுரை திவ்வியா |
| விண்ணப்பதாரர் பெயர் | :-Ms.இராசதுரை திவ்வியா |
| முகவரி | :-நீதிமன்ற வீதி, மல்லாகம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, வல்லை சங்கானை வீதியில் ஆதன இல. 100/20 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "சல்லி ஓடை" என்ற ஆதனம் K.சின்னத்துரை என்ற பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

பிரசித்த நொத்தாரிசு தவரத்தினம் தவனீசன் முகதாவில் 2025.06.09 ஆம் திகதியில் 17 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "சல்லி ஓடை" நிலப்பரப்பு 00 குளி 16.38 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்ப தாரரை வந்தடைந்துள்ளது. 17 ஆம் இலக்க உறுதி மூலம் இவ்வாதனத்தை விற்பனை செய்த பரஞ்சோதி அருந்தவராசாவுக்கும் பெண் சத்தியாவிற்கும் பிரசித்த நொத்தாரிசு குமாரசுவாமி விசுவலிங்கம் முகதாவில் 2007.06.20ஆம் திகதி 1691ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இவ்வாதனம் வந்தடைந்துள்ளது. 1691 ஆம் இலக்க உறுதி யாழ்ப்பாணக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H809/102 காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளின் பிரதி இவ் ஆதனவரிப் பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் 1691 ஆம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதியாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் சின்னத்துரை விக்னராஜா என்பவரால் குறித்த ஆதனம் தனது தாயாருக்கு உரியதாக இருந்து பின் தனது தாயார் கணபதிப்பிள்ளை சின்னத்துரை மனைவி செல்லம்மாவிற்கு இவ்வாதனத்தை கையளித்ததாகவும் அவரது இறப்பின் பின் மாதாவழி முதுசமாக தன்னை வந்தடைந்துள்ளது என்றும் 1691 ஆம் இலக்க உறுதியில் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை வலிகாமம் வடக்கு பிரதேசசபை வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு J/214 கிராமசேவகர் பிரிவு: "சல்லி ஓடை" நிலப்பரப்பு ஒன்றரை (நில.பர 01 ½) ஆனால் இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் 2004.11.04 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 1338ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1எனச் சுட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு பூச்சியம் குழி பதினாறு தசம் மூன்று எட்டு (நில.பர 00 குழி 16.38) இந்த நிலப்பரப்பு பூச்சியம் குழி பதினாறு தசம் மூன்று எட்டு (நில.பர 00 குழி 16.38)


இதன் எல்லைகள்

கிழக்கு :-ஒழுங்கை
வடக்கு :-நாகரத்தினம் பெண் உருத்திராதேவியின் ஆதனம்
மேற்கு :-ஒழுங்கை
தெற்கு :-ஒழுங்கை
இவ்வெல்லைப்படி இடதங்கலும்

தற்போது இவ்வாதனத்தை இராசதுரை திவ்வியா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இராசதுரை திவ்வியா எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


திரு.சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(6870)



மாசி மகத்தை முன்னிட்டு தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்திலிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் வரை பாற்குடபவனி நேற்று முன்தினம் திங்கட் கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# ஒரே நாளில் 630 பேர் கைது



(கொழும்பு)

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போது, 630 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 31,076 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், 9 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 248 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 157 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை,மதுபோதையில் வாகனம் செலுத்திய 159 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 39 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,677 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


**உடனடியாக பணியாள் தேவை**

கொடிகாமத்தில் உள்ள வீடொன்றிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு உடனடியாக பணியாள் தேவை.
தொடர்புகளுக்கு
076 762 6055
(C-5110)



**இந்திய சாஸ்திரியார் வருகை**


சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.
074 196 4945
இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-5109)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### ஈரான் தாக்குதல் எதிரொலி

# மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடியது சவுதி!



(ரியாத்)

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களை அடுத்து பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு தனது ராஸ் தனுரா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை சவுதி அரேபியா திங்களன்று மூடியது.

இரண்டு ட்ரோன்கள் சுத்திகரிப்பு நிலையப் பகுதியில் இடைமறிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசு எண்ணெய் நிறுவனமான சவுதி அரம்கோ அதன் ஒரு நாளைக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்கள் கொண்ட ராஸ் தனுரா சுத்திகரிப்பு நிலையத்தில் செயற்பாடுகளை நிறுத்தியதாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னெச்சரிக்கையாக சில சுத்திகரிப்பு அலகுகள் மூடப்பட்டன, ஆனால் எரிபொருள் மற்றும் பெற்றோலிய பொருட்களின் உள்நாட்டு விநியோகம் பாதிக்கப்படவில்லை என்று சவுதி அரசு செய்தி நிறுவனமான SPA கூறியது.

சவுதியின் இந்த நடவடிக்கை உலகளாவிய எண்ணெய் விலைகளை உயர்த்தக்கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (3)

# மூடப்பட்டது ஹா

# உலக நாடுகளுக்கு வெ

(டெஹ்ரான்).....................

**உலகின் மிக முக்கியமான எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது.**




ஹார்முஸ் நீரிணை வழியாக எந்தவொரு கப்பலும் செல்ல அனுமதி இல்லை எனவும், மீறிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் எனவும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹோண்டுராஸ் நாட்டின் கொடி ஏந்திய "ஏதி நோவா" என்ற எரிபொருள் கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த கப்பல் தீப்பற்றி எரிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கப்பல் அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டதாகவும், அமெரிக்க கடற்படைக்கு எரி

பொருஎ சாட்டிய பங்கு பாதை

இந் முக்கி பாதை

# ஈரானின் 11 கப்பல்களை மூழ்கடித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஓமான் வளைகுடாவில் ஈரானுக்கு சொந்தமான 11 கப்பல்களைத் தாம் மூழ்கடித்துள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த பகுதியில் ஈரானிடம் எவ்வித கப்பல்களும் எஞ்சியிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு தனது எக்ஸ் (X) தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இரண்டு நாட்களுக்கு முன்பு ஓமான் வளைகுடாவில் ஈரானிய ஆட்சியிடம் 11 கப்பல்கள் இருந்தன, ஆனால் இன்று அது பூச்சியமாக உள்ளது.

ஈரானிய ஆட்சி பல தசாப்தங்களாக ஓமான் வளைகுடாவில் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பதோடு தாக்குதல்களையும் நடத்தி வந்தது. அந்த நாட்கள் இனி முடிந்துவிட்டன.

கடல்சார் பயண சுதந்திரமானது 80 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க மற்றும் உலகளாவிய பொருளாதார செழிப்பிற்கு அடித்தளமாக இருந்து வருகிறது.

அமெரிக்கப் படைகள் அதனைத் தொடர்ந்து பாதுகாக்கும் என அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு தமது எக்ஸ் பதிவில் கூறியுள்ளது.

இதேவேளை ஈரானிய ஆட்சியினால் ஏற்படும் அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்காக, ஈரான் நாட்டில் அமெரிக்கா தொடர்ந்து பாரிய அளவிலான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்கள் மற்றும் நீண்டதூர ஏவுகணைகளைக் கொண்ட ஒரு ஈரானிய ஆட்சி, மத்திய கிழக்கிற்கும் அமெரிக்க மக்களுக்கும் ஒரு பொறுத்துக் கொள்ள முடியாத அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார். (3)



# இனி தற்கா அதிரடித் தாக்

## ♦ இஸ்ரேல்

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் ஒரு மிகப் பெரிய "தாக்குதல் பிரசாரத்தை" தொடங்கியுள்ளதாக அந் நாட்டின் இராணுவ தலைமை தளபதி இயல் ஜமீர் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

இதுவரை தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இஸ்ரேல், இனி ஆக்கிரமிப்புத் தாக்குதல்களை நடத்தும் எனத் தளபதி ஜமீர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,


ரா தெ இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ார்முஸ் நீரிணை
# ிசக் வைத்த ஈரான்!




ாருள் வழங்கியதாகவும் ஈரான் குற்றம் ட்டியுள்ளது. உலகின் ஐந்தில் ஒரு பகு எண்ணெய் போக்குவரத்து இந்தப் தை வழியாகவே நடைபெறுகிறது.

இந்த நீரிணை உலகின் மிக க்கியமான எண்ணெய் ஏற்றுமதி தையாகும். இது சவுதி அரேபியா, ஈரான், ஈராக் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற மிகப் பெரிய வளைகுடா எண்ணெய் உற்பத்தியாளர்களை ஓமன் வளைகுடா மற்றும் அரேபிய கடலுடன் இணைக்கிறது.

இந்த பாதை மூடப்பட்மையினால் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை கடுமையாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (3)

## ாப்பு இல்லை
## க்குதல் தான்!
## ல் அறிவிப்பு

நாங்கள் ஹிஸ்புல்லாவுக்கு எதிராகத் தாக்குதல் நடவடிக்கையைத் தொடங்கிவிட்டோம் இனி நாங்கள் தற்காப்பு நிலையில் மட்டும் இருக்கப் போவதில்லை, இப்போது தாக்குதலுக்குச் செல்கிறோம், என்று அதிரடியாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கை சில நாட்கள் அல்ல, பல நாட்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

இதற்காக இராணுவம் நீண்ட காலப்போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், அலை அலையாகத் தாக்குதல்களைத் தொடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து லெபனான் எல்லையில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் இந்த அதிரடி அறிவிப்பு, மத்திய கிழக்கில் ஒரு முழு அளவிலான போருக்கான அறிகுறியாகப் பார்க்கப் படுகிறது. (3)



## இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்றமைக்கு மோடிக்கு நன்றி தெரிவித்த நெதன்யாகு



(ஜெருசலேம்)

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழலில், இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்றதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நன்றி தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிய ஏவுகணைத் தாக்குதலால் 9 பேர் கொல்லப்பட்ட இஸ்ரேலின் பெய்ட் ஷெமேஷ் பகுதியில் உள்ள ஒரு யூத வழிபாட்டுத் தலத்தின் இடிபாடுகளுக்கு மத்தியில், பாதுகாப்புப் படையினருடன் நின்றவாறு அவர் இதனைத் தெரிவித்தார்.

"எனது சிறந்த நண்பரான நரேந்திர மோடியுடன் நான் நேற்று நீண்ட நேரம் பேசினேன். இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்றதற்கும், உண்மைக்காகக் குரல் கொடுத்ததற்கும், இந்திய மக்களின் அளப்பரிய நட்புறவிற்கும் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

இந்திய மக்கள் இஸ்ரேலில் பெரிதும் மதிக்கப் படுபவர்கள் மற்றும் நேசிக்கப்படுபவர்கள்," என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட நட்புறவு மற்றும் வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியா - இஸ்ரேல் இடையிலான ஆழமான பிணைப்பு உலகறிந்ததாகும். (3)

## லெபனான் மீது இஸ்ரேல் தீவிரத் தாக்குதல்



○ 52 பேர் உயிரிழப்பு
○ ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

(பெய்ரூட்)

ஹிஸ்புல்லாவின் தாக்குதலைத் தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் போரைத் தீவிரப்படுத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதலில் லெபனானில் குறைந்தது 52 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதியான தாஹியே மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிப் பயணித்தனர்.

ஏற்கனவே தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் உள்ள 50இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு இஸ்ரேல் வெளியேற்ற எச்சரிக்கை விடுத்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தலைமுறை இன்புளுவென்சா வைரசு தடுப்பூசி தயார்!



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உடற்சுகாதாரம் பற்றி வெகுவாகவே இப் பத்தி கட்டுரைகளில் எழுதியிருந்தாலும் தொற்று நோய்களுக்கான நோய்த் தவிர்ப்பு பொறிமுறை முழுமைபெறாததனால் அவ்வப்போது பலவுயிர்களை இவ் வைரசு நோய் காவு கொள்கின்றது என்னும் துயர்மிகு செய்திக்கு விடையை உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) அறிவித்திருக்கின்றது. உலகளவில் இவ்வைரசு நோய்க்கான கட்டுப்பாடு என்பது கேள்விக்குறியாகவே இருந்து வந்ததனையும் அதனால் உலக நாடுகளிலுள்ள மக்கள் அனைவரும் பாதிப்படைந்தனர் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

நோய்த்தொற்றுக்கு ஊட்டச்சத்து குறைபாடும் அதனால் உடலுக்கு தேவையான நோயெதிர்ப்பு சக்தி நலிவடைந்ததும் ஒரு வகை காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. வீரியங்கொண்ட இன்புளுவென்சா வைரசு வீரியங்கொண்டதாக திரிபடைந்து அதனது தொற்று ஏற்படுத்தும் நிலப்பரப்பை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

எமக்கு வழமையாக வரும் காய்ச்சல் மற்றும் தொண்டை கட்டு என்பன வைரசு நோய்க்கான அறிகுறியாக இருப்பதனால் மக்கள் அதிகளவில் இதனது பாதிப்பை கருத்தில் கொள்வதில்லை. எல்லாம் கஷாயம் குடித்தால் சரிவரும் என்னும் மனப்பாங்கு நிச்சயமாக நோயை ஏற்படுத்தும் காரணிகளைப் பொறுத்து தங்கியிருக்கின்றது. வைரசு நோய்கள் பல எம்மை அண்மைக்காலங்களில் சீண்டிவருகின்றன என்பதனை நாம் அனுபவமூலமாக அறிவோம். அதிலும் விலங்கினால் குறிப்பாக பூச்சிகளால் காவப்படும் வைரசு நோய்கள் மிகவும் பாரதூரமான அளவிற்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன. மேலும் இவ்வாறு பூச்சிகளால் அதுவும் நுளம்பினால் காவப்படும் வைரசு நோய்களான கொவிட், டெங்கு, மலேரியா போன்றவற்றினால் வரும் காய்ச்சல் மனித உடலை துளைத் தெடுத்து வருகின்றன.

இவற்றின் காவிகளான நுளம்புகள் பல்கிப்பெருகும் அதே வேளையில் அவற்றினால் காவப்படும் நோய்கள் மனிதனுக்கு தொற்றும் நோய்களாக பரந்துபட்டு பெருகி வருகின்றன. இவ்வாறான காவிகளை கட்டுப்படுத்துவதற்கு பலவகைகளில் அரச இயந்திரம் முயன்றாலும் மக்களின் பங்களிப்பின்றி காவிகளை குறிப்பாக நுளம்புகளை கட்டுப்படுத்த முடியாது. எமது சூழலை நாம் பாதுகாப்பது அவசியமானதாகும். இவ்வாறான காவிப்பூச்சிகள் பல்கிப்பெருகுவதற்கு எமது கவனயீனமும் அலட்சியமும்தான் முக்கிய காரணமாகும்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாளைய தலைமுறைக்கான இன்புளுவென்சா தடுப்பூசி ஏனைய வைரசு நோய்களுக்கும் நீண்ட நாட்களுக்கும் இன்புளுவென்சா வைரசு தொற்றிலிருந்து உலக மக்களைக் காப்பாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது ஒரு இமாலய சாதனை எனவும் உலக மக்களைக் காப்பாற்றும் முக்கியமான நகர்வு எனவும் எண்ணப்படுகின்றது.

உலக மக்களிடையே சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் கொள்கைகளில் இன்புளுவென்சா தடுப்பூசியின் தாக்கம் பற்றி அலசி ஆராயப்பட்டு உலகளவில் ஏற்படக்கூடிய தடைகள் மற்றும் வரம்புகள் பற்றியும் கணக்கிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் கொள்கை வகுப்புக்கள் மற்றும் முதலீடுகள் என்பன பற்றியும் அவற்றிற்கான திட்டங்கள் பற்றியும் ஆராய்ந்து இவ்வாறான நோய் கொவிட்-19 போல உலகளவில் ஆக்கிரமிக்க தொடங்கினால் அதனை கட்டுப்படுத்துவது பற்றியும் அலசியாராய்ந்திருக்கின்றது.

கொவிட்-19 என்னும் வைரசு நோயின் தாக்கத்தினால் உலக நாடுகள் பலவற்றில் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டதை நாமறிவோம்.

குறிப்பாக எமது நாட்டில் அந்த வைரசு தொற்றுடனேயே நாட்டின் கஜானா காலியான கதை இன்னும் எமக்கு நினைவிருக்கின்றது. அதன் பின்னர் நாம் கடன்படத் தொடங்கி பின் வட்டிக்கு கடன்பட்டு நாடே பொருளாதார சுமையை இங்கிருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் என விதித்து வைத்திருக்கின்றது.

மறந்துவிடாதீர்கள் நாம் எல்லோரும் தற்போது கடனாளிகள். பாரிய கடன்சுமையை சுமந்து கொண்டிருக்கின்றோம்.


வருடந்தோறும் ஒரு பில்லியன் இன்புளுவென்சா நோயாளிகள் உலகளவில் இனங்காணப்பட்டிருக்கின்றனர். அதில் 3 தொடக்கம் 5 மில்லியன் வரையிலான நோயாளிகள் அதிகூடிய நோயுடன் இருக்கின்றனர்.

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 2 இலட்சத்து 90 ஆயிரம் முதல் 6 இலட்சத்து 50 ஆயிரம் வரையான இறப்புக்கள் சுவாசத்திலேற்படும் சிக்கல்களால் நடைபெறுகின்றன.

தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள இன்புளுவென்சா தடுப்பூசியின் மூலம் பல்வேறு பருவங்கள் உற்பத்திகள் மற்றும் சனத்தொகையில் ஏற்படும் தாக்கத்தில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக கண்டறியப்பட்டுள்ளது.

இருவருடத்திற்கொருமுறை உலக சுகாதார நிறுவனம் உலகிலுள்ள இன்புளுவென்சா நிபுணர்களை உள்வாங்கி இன்புளுவென்சாவின் பரவல், மற்றும் இந்நோய்க்கு தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசியின் பயன்பாடு, அதன் மூலம் எந்தளவிற்கு இன்புளுவென்சா நோயின் வீரியம் குறைவடைகின்றது மற்றும் மக்கள் அதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என்பன பற்றிய தகவல்களைச் சேகரித்து அதனை முழுவதுமாகக் கட்டுப்படுத்தும் பொறிமுறையை உருவாக்குகின்றனர்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




பருவகாலத்து இன்புளுவென்சா நோய்த்தாக்க முள்ள 143 நாடுகளில் இவ்வாறான தடுப்பூசிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இன்புளுவென்சா வைரசு நோயை கட்டுப்படுத்துவதற்கும் அதிலும் குறைந்த நடுத்தர மற்றும் அதிகரித்த வருமானமுள்ள நாடுகளில் இந்த பொறிமுறையின் தாக்கத்தையும் அவற்றுக்குத் தேவையான தடுப்பூசிகளின் எண்ணிக்கையையும் கணிப்பிட இருக்கின்றார்கள்.

FVIVAஇன் கணிப்பின்படி நாளைய தலைமுறைக்கான உலகளாவிய இன்புளுவென்சா தடுப்பூசிகளினால் 2025இலிருந்து 2050 வரையான காலப்பகுதியில் 18 பில்லியன் இன்புளுவென்சா நோயாளிகளினை குணமாக்கலாம் எனவும் 6.2 பில்லியன் உயிர்களை காப்பாற்றலாம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் முதியவர்களைக் காப்பாற்றும் பொறிமுறை அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கின்றது.

உலகளாவிய நாடுகள் அனைத்தும் இந்நோயிலிருந்து மனிதர்களைக் காப்பாற்ற ஒன்றிணைந்துள்ளமை பாராட்டக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் பலநாடுகளில் செலவு குறைந்த அல்லது உற்பத்திச் செலவை வெகுவாக குறைத்து அனைத்து மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக இவ்வாறான தடுப்பூசிகள் உருவாக்கப்படுதனை ஆதரித்திருக்கும் இந்நிலையில் இதைப்போல ஏனைய தடுப்பூசிகளும் கிடைக்கக்கூயதாக இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் நோயெதிர்ப்பு மருந்துகளும் குறிப்பாக அன்ரிபயோடிக்ஸ் எனப்படும் நோயெதிர்ப்பு மருந்துகளின் உற்பத்தியையும் அதிகரித்து குறைந்த வருமானமுள்ள நாடுகளும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றமை நல்ல செய்தியாக எமக்கு கிடைத்திருக்கின்றது.

ஒருபக்கம் நோயெதிர்ப்பு மருந்துகளுக்கு எதிராக உருவாகும் நுண்ணங்கிகள், அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள் என antibiotic resistance என உலகம் உருண்டுகொண்டிருந்தாலும் மறுபக்கத்தில் இன்புளுவென்சா போன்ற தொற்று நோய்களுக்கெதிராக உலகநாடுகள் ஒன்றாக இணைந்து ஆய்வுகள் நடத்துவதும் அதனை மக்களுக்கு பயன்படுத்த முயற்சிப்பதும் மக்களைக் காப்பாற்றும் உத்தியாகவே பார்க்கலாம்.

தற்போது உலகத்தில் நடைபெறும் போர்மய சூழலும் மக்களை ஆயுதங்கள் கொண்டு கொன்று குவிப்பதனையும் எந்த வகையில் கணிப்பது.

நோய்களால் மக்கள் அழிவடைவதைவிட ஆயுதமயமாக்கலால் மக்கள் அழிவதும், ஒருவர் இன்னொருவரின் மீது போரைத் திணிப்பதும் எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 (VI)




புருசோத்தமன்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலை எங்களின் சொத்து. வைத்தியசாலைக்குத் தேவையான வளங்களைத் தருவதற்கு நம் மக்கள் ஒருபோதும் பின்னிற்கமாட்டார்கள்.

எனவே வைத்தியசாலையின் தேவைகளை யாழ்.போதனா வைத்தியசாலை நுழைவாயிலில் காட்சிப்படுத்தினால் கூட, நம்மவர்கள் அவற்றை நிச்சயம் பெற்றுத் தருவார்கள்.

இப்போது கூட, யாழ். போதனா வைத்தியசாலையில் இருக்கக் கூடிய முக்கியமான மருத்துவ சாதனங்கள் மற்றும் கட்டிடங்கள் எமது மக்களால் அதிலும் குறிப்பாகப் புலம் பெயர் தமிழ் உறவுகளாலும் அமைப்புக்களினாலும் வழங்கப்பட்டவை.

எனவே வைத்தியசாலையின் தேவையைப் பகிரங்கப்படுத்தும் போது, அவற்றைப் பெற்றுத் தருவதற்கு எங்கள் மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒரு வைத்தியசாலை என்றால், அதன் நுழைவாயிலில் வீல்செயார்கள் அடுக்கி இருக்க வேண்டும்.

அதேபோல விடுதிகள் மற்றும் எங்கெல்லாம் வீல் செயார்களின் பயன்பாடு தேவையோ அங்கெல்லாம் அவை போதுமான அளவு இருக்க வேண்டும்.

அதாவது ஒரு சுப்பர் மாக்கெற்றின் நுழைவாயிலில் எங்கனம் ரொலி (Trolley) அடுக்கி வைக்கப்பட்டுள்ளனவோ அது போல வைத்தியசாலை நுழைவாயிலில் வீல்செயார்கள் அடுக்கி இருப்பது அவசியம்.

தவிர, இயலாத நிலையில் வருகின்ற நோயாளர்களை வீல் செயாரில் அல்லது ஸ்ரெச்சரில் ஏற்றிச் செல்வதற்குப் பணியாளர்கள் தயாராக இருக்க வேண்டும்.

அந்த நிலையை யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி அவர்கள் பதவியேற்ற தொடக்க காலத்தில் அதனை அவர் நடைமுறைப்படுத்தியிருந்தார்.

தொடர்ந்தும் அதனை அவர் அமுலாக்குவார் என்ற நம்பிக்கை இத் தரிசனத்தில் வேண்டுதலாக முன்வைக்கப்படுகிறது.

### முறைப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யுங்கள்

யாழ்.போதனா வைத்தியசாலையை நிர்வகிப்பது என்பது சாதாரணமான விடயமன்று என்பதை ஏலவே இவ்விடத்தில் பதிவு செய்திருந்தோம்.

தவிர, மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர்களைப் பார்வையிடுவது குறித்த விமர்சனத்திற்கு இடமில்லை.

அது உலகம் முழுமையிலும் உள்ள நடைமுறை. அதேநேரம் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்லாமல், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களுடன் முழுநேரத்தையும் செலவிடுகின்ற வைத்திய நிபுணர்கள் நம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளனர் என்ற உண்மையை எவரும் மறந்தோ அன்றி குறைத்தோ மதிப்பிட்டு விடக்கூடாது.

எனினும் அத்தகையவர்களின் பெயர்கள் வெளியில் வருவதில்லை.ஆனால் உண்மையில் அவர்களின் சேவை யாழ். போதனா வைத்தியசாலையின் இயங்கு நிலையில் காத்திரமான பங்கை ஆற்றுகிறது என்பதை நாம் உரக்கக் கூறித்தான் ஆக வேண்டும்.

இது ஒரு புறம் இருக்க, வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தும் வகையில் துரித இலக்கத்தை (Hotline) யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் அறிமுகப்படுத்த வேண்டும். துரித இலக்கத்தை அறிமுகப்படுத்தும் போது ஆரம்ப கட்டங்களில் முறைப்பாடுகள் அதிகமாக இருந்தாலும் கால அசைவில் முறைப்பாடுகள் குறையத் தொடங்கும்.

இங்கு முறைப்பாடுகளின் குறைவு என்பது கவனிப்பின் உச்சமாக இருக்கும்.

### வைத்தியசாலையின் பெருந்துயரம்

தகவல் தொழில்நுட்பத்தின் அதீதமான வளர்ச்சி எங்கள் வாழ்வியலில் கணிசமான முன்னேற்றத்தை - வசதி வாய்ப்புக்களை வாரி வழங்கிவருகின்றன.

ஒரு காலத்தில் எங்கள் வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் இருந்து பணத்தை மீளப் பெறுவதாக இருந்தால், வங்கிக்கு சென்று உரிய படிவத்தை நிரப்பி இரண்டு ரூபாய் பெறுமதியான முத்திரை ஒட்டி, அதை ஒப்படைத்து, பெயர் அழைக்கும் வரை நீண்ட நேரம் காத்திருந்தே பணத்தை மீளப் பெறமுடியும்.

அதிலும் ஒரு வாரத்தில் இரண்டு தடவைகள் மட்டுமே அவ்வாறு பணத்தை மீளப்பெறலாம்.ஆனால் இப்போது நடுநிசியிலும் வங்கியில் பணம் பெறலாம்.

தவிர கையில் காசு இல்லாமலே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம் என்ற நிலை வந்துவிட்டது.

ஆனால் ஒரு குறித்த நோயாளி ஏலவே யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் இருந்திருந்தால் அல்லது தனியார் வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணரிடம் ஆலோசனை பெற்று அவரின் மேற்பார்வையின் கீழ் சிகிச்சை பெறுபவராக இருந்தால், அவரை மீளவும் வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கும் போது, சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணரின் விடுதியில் அனுமதிப்பது வழமை. அது சரியான ஏற்பாடும் கூட.

ஆனால் குறித்த நோயாளி விடுதியில் அனுமதிக்காகச் சென்ற நாள்; இன்னொரு விடுதிக்குரிய அட்மிசன் நாளாக (Admission day) இருந்தால், பிரஸ்தாப நோயாளி அந்த விடுதியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மறுநாளே அவருக்கு உரித்தான விடுதிக்கு மாற்றப்படுகிறார். இதுவே யாழ்.போதனா வைத்தியசாலையின் பெரும் துயரமாகும்.

ஆம், ஒரு நோயாளி ஏலவே குறித்த ஒரு விடுதியில் தங்கியிருந்து அல்லது அந்த விடுதிக்குரிய மருத்துவரின் மேற்பார்வையில் சிகிச்சை பெற்றிருப்பின், அவர் எந்த நாளில் விடுதி அனுமதிக்குச் சென்றாலும் அவரை அவருக்கு உரித்தான விடுதியில் அனுமதிப்பதில் இருக்கக் கூடிய தடைகள் என்ன? என்பது தான் தெரியவில்லை.

ஆம், ஒரு விடுதிக்கான அட்மிசன் நாளில், அந்த விடுதியானது ஆடி அமாவாசை காலத்து கீரிமலைத் தீர்த்தக் கரைபோல காட்சியளிக்கும்.

இங்கு தான் புதிய நோயாளர் தவிர, ஏனைய நோயாளிகள் எந்த நாளில் விடுதி அனுமதிக்காக வந்தாலும் அவர்கள் எந்த வைத்திய நிபுணரின் சிகிச்சைக்கு உட்பட்டவரோ அதற்கான விடுதியில் அவரை அனுமதிக்கும் போது அட்மிசனுக்குரிய வாட்டுகளின் மூச்சுத்திணறல் குறைவதற்கும் வாய்ப்புண்டு.

எனவே இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுப்பார் என நம்பலாம்.

நாளை தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்(வாக்கிய பஞ்சாங்கம்)
## (06.03.2026-24.04.2028)



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3-ம் பாதம்,

**ஆற்றலும், மனவலிமையும் கொண்டு விளங்கும் மிதுன இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு அட்டம, பாக்கியாதிபதியான சனி பகவான் உங்களின் தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து விரைய ஸ்தானத்தையும், சுக ஸ்தானத்தையும், களத்திர ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் கேந்திரம் பலம் பெறும் சூழ்நிலை அமையும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். வரவுக்கு தகுந்த செலவுகளை செய்து உங்களின் வாழ்க்கையை மாற்றி கொள்வீர்கள்.

இதுவரை பல காரியம் சுமையாக இருந்த நிலைமாறி நன்மை பெறுவீர்கள். கடந்த கால கசப்பான அனுபவங்கள் உங்களை விட்டுப் போகும். நினைத்ததை நினைத்த நேரத்திற்கு அடையும்படி உங்களின் செயல்கள் இருக்கும். பல தொழில்களில் ஈடுபட்டு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை பெறுவீர்கள். அரசியலிலும், பொது நலனிலும் சில மாற்றங்களை கொண்டு வரமுயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

எமது குடும்பத்தில் அனைத்து சலுகையும், கிடைக்கும் என்று நினைத்து செயற்படும் செயல்களில் வெற்றியைப் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. உங்களை வெறுத்து ஒதுக்கியவர்களை மீண்டும் ஏற்று கொள்ளும் சூழ்நிலை அமையும். உங்களின் உறுதியான மனவலிமை உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும். அரசு சார்ந்த சில விடயங்களை கையாளும் போது நீங்கள் தரும் ஆலோசனைகள் நல்ல பலனை பெற்றுத் தரும். நீண்ட நாள் கடன்களில் சில தொகைகளை கட்டிக் குறைத்து கொள்வீர்கள். நல்ல பணியாளர்களுக்கு சரியான பரிகாரம் கிடைக்க பெறுவீர்கள். வாகனம் வாங்க நினைப்பவர்களுக்கு இது நல்ல வாய்ப்பாக அமையும். சரியான ஆசான் கிடைக்க பெற்று, பல உன்னதமான பயிற்சிகளை பெறுவீர்கள். காரியத்தை சரியான காலத்தில் செய்து நல்ல பலன்களை அடைவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

வெளிநாடு செல்ல நினைத்து நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்களுக்கு தெரிந்த மொழியை தவிர பிற மொழிகளையும் கற்றுக் கொள்வீர்கள். முதலீடுகள் இல்லாத தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வெற்றிலை மாலை சாற்றி, செந்தூரம் - நெய் தீபம் ஏற்றி வேண்டிக் கொள்ள, அனைத்துக் காரியங்களும் நன்மையை தரும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.



## கடகம்

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

**காலத்தை அறிந்து அதற்கு தகுந்தபடி பணியாற்றும் கடக இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு களத்திர ஸ்தானாதிபதியும், அட்டம ஸ்தானாதிபதியுமான சனி பகவான் இராசிக்கு பாக்கியஸ்தானத்தில் அமர்ந்து லாபஸ்தானத்தையும், முயற்சி ஸ்தானத்தையும், சத்ரு (ஆறு) ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் எதிர்கால நலன்களில் பல்வேறு சோதனைகளை சாதனைகளாக மாற்றி அமைக்கும் காலமாக இனி அமையும். எதையும் முன்கூட்டியே அறிவீர்கள்.

உங்களின் இராசிக்கு இதுவரை அட்டம சனி இருந்தமையால் பல தோல்விகளையும் அவமானங்களையும் அடைந்தீர்கள். இனி அதிலிருந்து விடுபட்டு, சனி பாக்கியஸ்தானத்தில் அமர்வதும் நட்பான நல்ல பலன்களை பெறுவீர்கள். வாகன வசதிகளையும், வாகனம் மூலம் ஆதாயம் பெறுவதும், முதலீடுகள் குறைவாக இருந்தாலும் உங்களுக்கு அதில் நல்ல இலாபம் கிடைக்கும்படியான சூழ்நிலைகளும் இனி அமையும்.

சோதனைகளை வென்று நல்ல நிலைக்கு வரும் வாய்ப்புகள் அமையும். அரசியலிலும், பொதுவான விடயங்களிலும் நீங்கள் எண்ணியபடி பல காரியம் சித்தியாகும். வரவுக்குள் செலவு செய்வதும் ஜென்ம குரு வரும் போது ஆன்மீகத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய கடன் நிவர்த்தியாகும் வாய்ப்பையும் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் பெற்று விரைவில் பிரபலமாவீர்கள். தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளம், பதவி உயர்வு கிடைத்து மேன்மை பெறுவீர்கள். சாமானியர் கூட இனி உங்களிடம் தொடர்பு கொண்டு வாழ்வில் முன்னேற அறிவுரைகளை பெறுவார்கள். உங்களின் முயற்சி மிகவும் சிறப்பாக அமையும்.

பாக்கியஸ்தானத்தில் எந்த கிரகம் அமர்ந்திருந்தாலும் நற்பலன்களை தருவார்கள். அது போல சனி பகவான் உங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார். ஓராண்டு முழுவதும் குரு சனியை பார்க்கும் காலம் உங்களின் சகல காரியமும் வெற்றி தரும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமைகளில் விநாயகர் வழிபாடு செய்து அறுகம்புல் மாலை சாற்றி தேங்காய் எண்ணெய் தீபம் ஏற்றி எள் கலந்த அன்னம் வைத்து வேண்டிக் கொள்ள எல்லாக் காரியமும் திறம்பட நடக்கும். பொருளாதாரம் பெருகும்.



## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்,

**துணிச்சலுடன் எதையும் செய்யும் மனவலிமை கொண்ட சிம்ம இராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு சத்ரு ஸ்தானத்திற்கும், களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியான சனிபகவான் உங்களின் இராசிக்கு தன ஸ்தானத்தையும், பஞ்சம ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்வை இடுவதும் அட்டம ஸ்தானத்தில் அமர்ந்து இருப்பதும் வெற்றியையும் கால மாற்றங்களால் ஏற்படும் சூழ்நிலைகளால் ஆதாயமும் பெறுவீர்கள். தனித் திறமையுடன் செயற்படுவீர்கள்.

உங்களின் இராசிக்கு சத்ரு ஸ்தானாதிபதியான சனி பகவான் அட்டம ஸ்தானத்தில் அமர்வது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பது போல உங்களின் அனைத்து காரியமும் சிறப்பாக நடைபெறும் வாய்ப்பை பெறுவீர்கள். அட்டம குரு விரைய ஸ்தானத்தில் அமர்ந்து அட்டம சனியைப் பார்ப்பது அந்த வீட்டிற்கு குரு சனியை பார்ப்பது மேலும் நற்பலன்களை பெற்று தரும். அதிகாரத்தில் உயர் பதவி அடைவதும், இருக்கும் பதவிகளில் சிறப்பாக செயற்பட்டு பாராட்டு பெறுவதும் உண்டாகும். அரசியலில் ஈடுபாடு கொள்பவர்களுக்கு அதிசயத்தக்க நல்ல பலன்களை பெறுவீர்கள். எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரும்.

கலைத்துறையினர் வருமானத்திற்கு தகுந்த வளர்ச்சியை பெறுவீர்கள். காலத்தை அறிந்து நீங்கள் எதை செய்தாலும் வளர்ச்சியை பெறுவீர்கள். குறுகிய கால முதலீடுகளில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். உறவுகளில் இருந்த விரிசல் இனி முடிவுக்கு வரும். தொழில் செய்து வருபவருக்கு தொழிலில் கூடுதல் நற்பலன் உண்டாகும். வெளிநாட்டு தொழில்களில் வாய்ப்புகள் கிடைக்க பெறுவீர்கள். எதற்காகவும் யாருக்கும் நீங்கள் முடிவெடுத்த விடயத்தை விட்டு கொடுக்க மாட்டீர்கள். நினைத்ததை சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். கணவன் மனைவிக்குள் அடிக்கடி பிரச்சினைகள் உண்டாகும். தனித் திறமையுடன் செயற்படும் உங்களின் கொள்கைகளை மேம்படுத்த பாடுபடுவீர்கள்.

பெரும்பாலும் யாருக்கும் பிணையம் இடுவதை தவிர்ப்பது நல்லது. பிறருக்கு கடன் வாங்கி கொடுப்பதும், தான் என்று ஏற்று கொள்வதும் நல்ல தல்ல. முடிந்த வரை தவிர்ப்பது நல்லது, நல்ல விடயங்களில் முன்னின்று செயற்படலாம். பணம் சார்ந்த பரிவர்த்தனையை தவிர்ப்பது நல்லது.

**பரிகாரங்கள்:**

ஞாயிறு மாலை ராகு காலத்தில் வைரவர், நரசிம்மர் வழிபாடு செய்வது நல்லது. மூன்று நெய் தீபம் ஏற்றி தயிர் அன்னம் நைவேத்தியம் வைத்து பக்தர்களுக்கு தானம் செய்து வர, நீங்கள் எண்ணிய எண்ணம் சிறப்பாக அமையும்.



## கன்னி

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

**அறிவும், ஆற்றலும் நிறைந்து எதையும் சாதிக்கும் கன்னி இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு பஞ்சம ஸ்தானாதிபதியும், சத்ரு ஸ்தானாதிபதியுமான சனி பகவான் 06-03-2026 முதல் களத்திர ஸ்தானத்தில் அமர்ந்து இராசியையும் சுகஸ்தானத்தையும் பாக்கிய ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் வாழ்க்கையில் பல்வேறு விதமான விடயங்களை நிதானமாக செயற்படுத்தும் திறமையை வளர்த்து கொள்வீர்கள். சனி கொடுத்தால் யார் தடுப்பார். சனி கெடுத்தால் யாரும் தருவார்.

உங்களின் இராசிக்கு நட்பு சிரகமான சனி உங்களுக்கு நன்மையும், தீமையும் வழங்குவார். இனி எதை செய்தாலும் நன்கு ஆய்வு செய்த பின் மேற்கொள்வது நல்லது. சிறு விடயங்களாக இருந்தாலும் அதனை கையாளும் விதத்தை பொறுத்து நற்பலன்கள் கிடைக்கும். அவசர கோலத்தில் செய்யும் எந்தவித காரியமும் பலன் தராது. இதனை புரிந்து செயற்படுவது நல்லது. அரசியல் ஈடுபாடு சில நேரம் சரியாக அமையாமல் போகும். உங்களின் வளர்ச்சி உங்கள் கையில் உள்ளது என்பதை உணர்ந்து கொள்வது அவ சியம். பசித்தவருக்கு உணவு அளித்தல், ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்தல், பறவைகளுக்கு இரை இடுதல் இது போல காரியங்களை தொடர்ந்து செய்து வருதல் மிக்க சிறப்பான நற்பலனை தரும்.

பணமே உங்களுக்கு சில நேரம் பகையை உண்டு பண்ணும் என்பதால் பணத்தை கையாளும் விதம் மிக சிறப்பாக அமையும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவுகளில் சில நேரம் பிரச்சினை வரலாம். அதிகம் வாக்குவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. குடும்ப பிரச்சினையை கையாளும் போது நிதானம் மிகவும் முக்கியம். சோதனையை கண்டு பயப்படாமல் அதற்கு தீர்வுகளை யோசித்து செயற்படுவது நல்லது. எந்த ஒரு காரியமும் மனவருத்தத்தை தராமல் செய்து வர பழகிக் கொள்வது இந்த காலத்திற்கு நல்லது. நண்பர்களிடம் பழகும் போது பணம் சார்ந்த விடயங்களில் கவனமாக இருப்பது உங்களுக்கு நல்லது.

வாகனம் இயக்கும் போது சாலையில் நிதானமும், கவனமும் அவசியம். இதனால் சில நேரம் மனகஷ்டப் பட வேண்டி வரும். வாக்குறுதி நிறைவேற சில நேரம் போராட வேண்டியதிருக்கும். கணனித் துறையில் சிறந்து விளங்குவீர்கள். உங்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும். குரு பார்வை பெறும் காலம் நன்றாக இருக்கும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமை ராகு காலத்தில் (9.00 - 10.30) வைரவருக்கு எட்டு நல்லெண் ணெய் தீபமிட்டு மிளகு அதில் போட்டு ஏற்றி வேண்டிக் கொள்ள உங்களின் பிரச்சினைகள் விரைவில் தீரும். அன்னதானத்தை செய்து வர, வரும் துன்பம் முழுமையாக தீரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வாய்ப்புகளை அதிகமாக பயன்படுத்திக் கொள்ளும் போது நம் திறமை வளர்ந்து மெருகேருகிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆக்க வேண்டிய அறிவியல் அழித்துக் கொட்டுகிறது பார்

தகவல் தொடர்பாடல் நம் கைகளுக்குள் வந்தபின் பேரதிர்ச்சிகளும் நெஞ்சை நெருடுகின்ற நிகழ்வுகளும் இதயத்தைக் கருக்கி விடுகின்றன.

அந்தோ! கொடுமை. ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டாக நடத்திய தாக்குதலையடுத்து, இப்போது மத்திய கிழக்கில் மனித உயிர்கள் துடிதுடித்துப் பலியாகின்றன.

தடுப்பாரும் இல்லை. தட்டிக்கேட்பாரும் இல்லை என்ற நிலையில் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற ஏக்கம் மனித குலத்தை வாட்டி வதைக்கிறது.

உண்மை. இன்றைய உலகில் எவரும் எங்கும் வாழக்கூடியதான சூழ்நிலை ஏற்பட்டதால், எல்லா நாட்டு மக்களும் எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற வாய்ப்புக்கிடைத்தது.

இஃது மனித குலத்துக்குக் கிடைத்த ஒரு பெரும் கொடை என நினைத்தபோது, வல்லாதிக்க நாடுகள் நடத்துகின்ற கொடிய போரால் உலகம் முழுமையும் அதிர்ந்து போயிற்று.

ஆம் ஈரானில், கட்டாரில், சவுதியில் எங்கள் பிள்ளைகள் வேலை செய்கின்ற நாடுகளில் ஏவுகணைத் தாக்குதல்கள் இடம் பெறும் போது, எம் பிள்ளைகளின் கதி என்னவோ ஏதோ என்று ஏங்கி ஏங்கி காலம் கழிக்கின்ற மிகக் கொடுமையான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, மத்திய கிழக்கு நாடுகள் யுத்தத்துக்குள் மூழ்கும்போது உலகம் பாரிய எரிபொருள் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியதாகிறது.

என்ன செய்வது மனித வாழ்வில் அனைத்து விடயங்களிலும் எரிபொருளின் வகிபாகம் தவிர்க்க முடியாதது.

நிலைமை இதுவாக இருக்கும்போது, வரிசையில் நின்று எரிபொருளைப் பெறுவதென்பது மிகக் கடினமான காரியம்.

இதனால் தொழில் இழப்புகளும் வருமானக் குறைவுகளும் ஏற்படும்.

ஆக, ஈரானைத் தாக்குவதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அது அத்தனை உலக மக்களையும் ஏதோவொரு வகையில் வஞ்சிப்பதாகவே இருக்கும்.

எதுஎவ்வாறாயினும் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற நாடுகளில் இருக்கக்கூடிய நம் நாட்டவர்களைப் பாதுகாப்பாகத் தாயகத்துக்கு அழைத்து வருகின்ற ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இதில் தாமதங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நம்மவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு மிகவும் அவசியமானது.

அதேநேரம் போர்க்காலச் சூழலில் நம் நாட்டவர்களை மீட்டுவருவதில் கடினங்கள் இருக்கலாம். இங்குதான் இந்தியா போன்ற அண்டை நாடுகளுடன் தொடர்பு கொண்டு நம்மவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

# எரிவாயு, எரிபொருள் தொடர்பில் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை

## அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

எரிவாயு மற்றும் எரிபொருள் தொடர்பில் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டிற்காக 380,000 மெட்ரிக் தொன் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் 24,000 மெட்ரிக் தொன் மற்றும் பெப்ரவரி மாதத்தில் 28,000 மெட்ரிக் தொன் எரிவாயு கொண்டு வரப்பட்டது.

மார்ச் மாதத்திற்கான தேவை 32,000 மெட்ரிக் தொன் ஆகும். ஆனால் 38,000 மெட்ரிக் தொன் எரிவாயுவைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக மார்ச் 31ஆம் திகதிக்குள் 10 கப்பல்கள் வரவுள்ளன.

தினசரி விநியோகம் 1,200 மெட்ரிக் தொனிலிருந்து 1,800 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு சந்தையில் 82% பங்கினைக் கொண்டுள்ள லிட்ரோ *(Litro)* நிறுவனம் விநியோகத்தை அதிகரித்துள்ளது.

சில நிறுவனங்கள் முறையாக எரிவாயுவை வழங்கத் தவறினால், நுகர்வோர் தங்களின் மஞ்சள் நிற கொள்கலன்களை நீல நிற கொள்கலன்களுக்கு மாற்றிக் கொள்ள அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

புதியதாக ஒரு இலட்சம் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் விநியோகம் இம்மாதம் 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்.

எரிபொருள் விநியோகம் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் முதல் இதற்காக இந்தியாவில் இருந்து 17 கப்பல்களும் சிங்கப்பூரிலிருந்து 5 கப்பல்களும் வந்துள்ளன.

உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யத் தேவையான திட்டங்கள் இருப்பதால் பொதுமக்கள் அச்சமடைந்து பொருட்களைச் சேமிக்கத் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (ம-7)

## மத்திய கிழக்கில் மோதல்

# வெளிநாட்டுத் தபால் சேவைகள் தாமதம்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நிலவும் அமைதியின்மை காரணமாக வெளிநாட்டுத் தபால் சேவை தாமதமடைந்துள்ளதாகத் தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

ஏற்படக்கூடிய தாமதம் காரணமாக உணவுப் பொருட்களை தபால் ஊடாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்கான தபால் சேவைகள் மத்திய கிழக்கு நாடுகள் ஊடாக இடம்பெறுவதால் வெளிநாட்டுத்தபால் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ம-7)

# எரிபொருள் சேகரித்தால் சட்ட நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பிரிவு

சட்ட விரோதமாக எரிபொருளைச் சேமித்து வைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது உருவாகியுள்ள பாதகமான சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் முறையற்ற விதத்தில் எரிபொருளைச் சேமித்து வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சில தரப்பினர் திட்டமிடப்பட்ட வகையில் போத்தல்கள் அல்லது பிற வெளிப்புறக் கொள்கலன்களில் எரிபொருளைச் சேகரித்து வருவதால் இத்தகைய செயல்களைத் தடுக்க மீன்பிடிப் படகுகள், தொழிற்சாலைகள், பணியிடங்கள், விவசாயம் மற்றும் வீட்டுத் தேவைகள் ஆகியவற்றிற்குத் தவிர மீண்டும் அறிவிப்பு வழங்கப்படும் வரை கொள்கலன்கள், போத்தல் அல்லது வேறு பொருட்களில் எரிபொருளை வழங்காமல் இருப்பதற்கு எரிபொருள் நிலைய மேலாண்மைத்துவத்துடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்க அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தேவையற்ற முறையில் எரிபொருளைச் சேகரித்து கையிருப்பில் வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மற்றும் எரிபொருள் தொடர்பாக சமூக ஊடகங்களில் பல்வேறு பொய்யான தகவல்களைப் பரப்பும் நபர்கள் அல்லது குழுக்கள் குறித்து விசாரணை செய்து, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரித்துள்ளது. (ம-7)

## மதுபானம் விற்பனை ● ● ● ● மருதங்கேணியில் ஒருவர் கைது

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் விடுமுறை தினமான நேற்று முன்தினம் (2) சட்டவிரோதமாக மதுபானம் விற்ற ஒருவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறை தினத்தில் மதுபானம் விற்க அனுமதி இல்லாத போதும் மருதங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையில் மிகவும் இரகசியமான முறையில் சட்ட விரோதமாக மதுபான விற்பனை இடம்பெற்றுள்ளது.

மருதங்கேணி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான குழுவினர் சட்ட விரோதமாக மதுபானம் விற்ற ஒருவரை மதுபானப் போத்தல்களுடன் கைது செய்தனர். (ம-7,60)

# போதைப்பொருட்களுடன் பெண்கள் இருவர் கைது

(கொழும்பு)

நாட்டின் இருவேறு பகுதிகளில் இருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிவேரிய, எம்பரலுவ வடக்கு பகுதியில் 25 கிராம் ஹெரோயினுடன் வெலிவேரிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 410,470 ரூபாய் பணத்துடன் மற்றுமொரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 12 பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

36

இந்தச் சிறிய பொறியை வைத்துக் கொண்டு. விசாரணையைத் துரிதப்படுத்தினார் ஜேன். இதன் மூலம், ஆம்ஸின் வங்கிக் கணக்கில் ஏகப்பட்ட பணம் போடப்பட்டிருப்பது தெரியவந்தது. அவருடைய சம்ப ளத்துக்கும், அவரது சொத்துகள், மாதந்தோறும் செலவழிக்கிற தொகைக்கும் சம்பந்தமே இல்லை.

இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கிறபோதுஅல்ட்ரிச் ஆம்ஸ்தான் நாம் தேடுகிற "துரோகி" (Mole) என்பது ஜேனுக்குப் புரிந்துவிட்டது. ஆனால், அவரைக் கைது செய்து விசாரிக்கிற அதிகாரம் சிஐஏவுக்கு இல்லை.

ஆகவே, தயங்காமல் FBI அமைப்பை அணுகினார் ஜேன். FBIக்கும் சிஐஏவுக்கும் ஏழாம் பொருத் தம் என்பதைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்படவில்லை. தப்புச் செய் தவன் தண்டிக்கப்பட்டாகவேண்டும். அதற்காக FBIயுடன் இணைந்து பணியாற்றுவதில் தப்பே இல்லை என்று கருதினார் அவர்.

இதனால், அபூர்வமான CIA FBI கூட்டணி உருவானது. அல்ட்ரிச் ஆம்ஸைப் பொறி வைத்துப் பிடிப் பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

இந்த வழக்கு கிட்டத்தட்ட முடிகிற நேரத்தில், ஜேனுக்கு அறுபது வயது கடந்துவிட்டது. விதிமுறைகளின்படி, அவர் சிஐஏவிலிருந்து ஓய்வு பெற் றாகவேண்டும்.

ஆனால், இந்த விடயத்தைப் பாதியில் நிறுத்த ஜேன் விரும்ப வில்லை. ஒருவேளை அவர் விலகி விட்டால், நாளைக்கு வேறு யாரேனும் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு. தப்புச் செய்தவர்களைத் தப்பிக்க விட்டுவிடலாம் என்பது அவருடைய கவலை.

இதனால், ஒப்பந்த அடிப்படையில் சிஐஏவில் தொடர்ந்து பணியாற்றினார் ஜேன். அல்ட்ரிச் ஆம்ஸ்"க்கும் சோவி யத் யூனியன் உளவுத் துறைக்கும் இருந்த தொடர்புகளை ஆதாரத்துடன் நிரூபித்து. அவரைக் கைது செய்த பிறகுதான் ஜேனுக்குத் திருப்தியானது.

அல்ட்ரிச் ஆம்ஸ் சாதாரண ஆசாமி இல்லை. சிஐஏவின் சோவியத் யூனியன் எதிர் உளவு (Counter intelligence)பிரிவுத் தலைவரா கவும், வேறு பல முக்கியப் பொறுப்புகளையும் வகித்தவர். இப்படி சிஐஏவின் உயர்பதவியில் உட்கார்ந்து கொண்டு. ஒருவர் சோவியத் ஒற்றராகச் செயற்பட்டிருக்கிறார் என்ற விடயம். அமெரிக்கர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி.

சிக்கலான இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, பல ஆண் டுகளாகப் போராடிய ஜேன், கடைசியில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வாங்கிக்கொடுத்தபிறகுதான் சிஐஏ விலிருந்து கம்பீரமாக ஓய்வு பெற்றார்.

இந்தத் தகவலை அறிந்த "டைம்" (Time) பத்திரிகை, தங்கள் இதழில் ஜேனின் பேட்டியை வெளியிட விரும்பியது. ஆரம்பத்தில் இதை ஏற்க மறுத்த ஜேன் பிறகு ஒப்புக்கொண்டார்.

காரணம், உளவுத்துறை என்பது ஆண்களின் வேலை என்றுதான் பல பெண்கள் . உலகெங்கும் தயங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக் கெல்லாம். இங்கேயும் பெண்களால் சிறப்பாகப் பங்களிக்கமுடியும் என்கிற நம்பிக்கையைத் தர விரும்பினார் ஜேன்.

அவர் நினைத்ததுபோலவே, "டைம்" இதழில் வெளியான ஜேன் பேட்டிக் கட்டுரை, அமெரிக்கப் பெண்க ளிடையே பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியது. அதுவரை. உளவுத் துறையில் பணிபுரிகிற பெண்கள் எல்லோரும் சும்மா கோப்புகளை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிய பலர், அதன்பிறகு தங்களு டைய கருத்துகளை மாற்றிக் கொண் டார்கள்.

இதன் விளைவாக சிஐஏவில் இணைவதற்காக விண்ணப்பிக்கும் இளைஞர்களின் பட்டியலில், பெண் களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியது. 1990ஆம் ஆண்டில் வெறும் ஏழு சதவிகிதமாக இருந்த பெண் உளவாளிகளின் எண் ணிக்கை, அடுத்த ஐந்து வருடங் களுக்குள் இருமடங்காகிவிட்டது.

தொண்ணூறுகளின் இறுதியில் தொடங்கி, ஒவ்வோர் ஆண்டும் சிஐஏவில் இணைகிறவர்களில் கிட்டத் தட்ட பாதிக்குப் பாதி பெண்கள்தான் இவர்கள் எல்லோருமே. கஷ்டமான பயிற்சிகளைக் கடந்து, பல நாடுகளில், சிரமமான சூழ்நிலைகளில் பணி புரிந்தார்கள், பணிபுரிந்துகொண்டி ருக்கிறார்கள்.

இதனால், இவர்கள் சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள் நிறைய. "போயும் போயும் உளவாளியாகவா வேலை பார்க்கிறாய்?" என்று கேலி செய்கிற வர்களில் தொடங்கி, அங்கே ஆண் களின் ஆதிக்கம்தானே அதிகம்? நீ போய் என்ன பெரிதாகச் சாதித்து விடப்போகிறாய்?" என்று நம்பிக் கையைக் குலைக்கிறவர்கள் வரை, உளவுப் பெண்கள் பல தடங்கல் களைக் கடந்துதான் முன்னேற வேண்டியிருந்தது.



அதன்பிறகும், அவர்களுடைய வேலை நிம்மதியாக அமைந்துவிடாது பெண் என்கிற ஒரே காரணத்துக்காக அவர்களைப் புறக்கணிக்கிறவர்கள். ஒத்துழைக்க மறுக்கிறவர்களின் அவஸ்தை அதைத் தாண்டி ஒவ்வொரு படி முன்னேறுவதும், முக்கியப் பதவி கள், பொறுப்புகளைப் பெறுவதும் மிகச் சிரமமான காரியம்.

இதுதவிர, வெளிநாடுகளில், குறிப்பாக மத்திய கிழக்கு தேசங்களில் உளவாளிகளாகப் பணிபுரியும் பெண்க ளுக்குப் பல கூடுதல் அபாயங்கள் காத்திருந்தன. மிரட்டல்கள், பாகு பாடுகள், பாலியல்ரீதியிலான துன்புறுத் தல்கள் என்று பலவற்றையும் சமா ளித்துதான் அவர்கள் தங்களுடைய தினசரிக் கடமைகளை நிறை வேற்றவேண்டியிருந்தது. இதனால், பெண்களுக்கு உளவுத் துறை ஏற்றதல்ல என்கிற பேச்சு மீண்டும் எழுந்திருக்கிறது. சிஐஏ விலிருந்து இராஜினாமா செய்து வெளி யேறிய பல பெண் அதிகாரிகளை இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள்.

என்.சொக்கன்

ஆனால் அதேசமயம், சிஐஏவி லேயே தொடர்ந்து சிறப்பாகப் பங்களித்து முன்னேறிவரும் பெண் களும் நிறையவே இருக்கிறார்கள். அமெரிக்கப் பெண்கள், இவர் களைத்தான் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது சிஐஏ.

மற்ற விவகாரங்களைப்போலவே, இதிலும் விவாதங்கள் இப்போதைக்கு ஓய்வதாகத் தெரியவில்லை. சிஐஏவில் பெண்கள் வேண்டுமென்றே ஒதுக்கப் படுகிறார்கள் என்று சிலரும், அதெல் லாம் இப்போது மாறிவிட்டது என்று சிலரும் மாறி மாறி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சற்றே ஆறுதலான ஒரு புள்ளி விபரம். இத்தனை கலாட்டாக்கள். வம்பு விவகாரங்களுக்கு நடுவிலும். சிஐஏவில் பெண்களின் எண்ணிக்கை, பங்களிப்பு ஒவ்வோர் ஆண்டும் கணிசமாக அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது!

### 14. கண்ணாடி பிம்பம்

ஒருகாலத்தில், உலகின் எந்த மூலையில், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஓர் அரசு கவிழ்ந்தாலும் ஒரு தலைவர் படுகொலை செய்யப் பட்டாலும், திடீரென்று உள்நாட்டுக் கலவரம் மூண்டாலும், உடனடியாக சிஐஏமீதுதான் முதல் சந்தேகப் பார்வை விழும்.

அநாவசியமாக மற்றவர்களின் விஷயத்தில் மூக்கை நுழைப் பதற்காகவே, அமெரிக்கா சிஐஏ என்ற ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறது என்பதுதான் பலருடைய எண்ணம். அதற்கேற்ப, அமெரிக்காவின் "பெரியண்ணன்" இமேஜை நிலை நிறுத்துவதற்குதான். சிஐஏ பயன் பட்டுக்கொண்டிருந்தது. இதுபோன்ற இரகசிய நடவடிக்கை களின்மூலம், சிஐஏ, அமெரிக்காவுக்குக் கிடைத்த நல்ல பெயரைவிட, கெட்ட பெயர் தான்அதிகம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 205 விமான...

தாகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது நிலவும் சூழ்நிலையால் விமானப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை குறித்து நேற்று (03) அமைச்சின் வளாகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"நாட்டுக்கு வரவிருந்த 107 விமானங்களும் புறப்படவிருந்த 98 விமானங்களும் என மொத்தம் 205 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார். (ம-7)

## ஈரான் ஈடுபட்ட...

வருவதற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

"ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான எந்தவொரு ஆதாரமும் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. உண்மையில், இந்தப் போரை நியாயப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட பிரதானமான மற்றும் ஒரே காரணமும் அதுவேயாகும்," என லாவ்ரோவ் மேலும் குறிப்பிட்டார்.

ஈரான் மீது நடத்தப்படும் இந்தத் தாக்குதல்களின் விளைவுகள் தற்போது பிராந்தியம் முழுவதும் உணரப்படுவதாகவும் குறிப்பாக அரபு நாடுகள் இதற்கான பொருளாதார ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த மோதல்களினால் ஏற்படும் உயிர் மற்றும் சொத்து இழப்புகள் காரணமாக அண்டை நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## மாட்டுடன்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப் பத்திரமன்றி இறைச்சிக்காக சட்டவிரோதமாக மாட்டை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற இருவரை வெற்றிலைக்கேணிப் பகுதியில் வைத்து மருதங்கேணிப் பொலிஸார் கைது செய்தனர்.

மருதங்கேணிப் பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவே குறித்த இருவரைக் கைது செய்தது. (ம-7,60)

## அமெரிக்கர்களை...

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்குதல்களை முன்னெடுத்துள்ள நிலையில், நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய பஹ்ரைன், எகிப்து, ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்தான், குவைத், லெபனான், ஓமான், கட்டார், சவுதி அரேபியா, சிரியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கப் பிரஜைகள் இவ்வாறு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ரியாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது இரண்டு ஆளில்லா வானூர்திகள் தாக்கியுள்ளன.

இதன் விளைவாக சிறு அளவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதுடன் கட்டடத்திற்கு சிறிய அளவில் பொருட்சேதம் ஏற்பட்டதாக சவுதி அரேபியாவின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (ம-7)

## பிரதம நீதியரசர்...

செவ்வாய்க்கிழமை (3) மன்னார் நீதிவான் நீதிமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

இதன்போது மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, மன்னார் மாவட்ட நீதிவான் ஐ.என். றிஸ்வான், மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் எம்.எம்.எப்.ஸிஹாரா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து பிரதம நீதியரசரை வரவேற்றனர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்றக் கட்டிடத்தில் பிரதம நீதியரசர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது நீதிமன்றச் செயற்பாடுகள் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. (ம-7,285)

## 3 இலட்சத்து...

ஒரு லட்சம் லீற்றர் பெற்றோலும் 90 ஆயிரம் லீற்றர் டீசலும் தேவைப்படுகின்றது.

இப்பொழுது மத்திய கிழக்கில் நடைபெறும் ஈரானை மையமாகக் கொண்ட மோதல் ஆரம்பித்த காரணத்தினால் அதிக பெற்றோல் வரிசைகளும் அதிக அளவு பெற்றோல் விநியோகமும் நடக்கிறது.

இது அதிகரித்த பாவனை அல்ல. மாறாக அதிகரித்த கொள்வனவாகவே காணப்படுகின்றது.

இந்த அதிகரித்த கொள்வனவு சேமிப்பை நோக்கமாகக் கொண்டு இடம்பெறுகின்றது. இருந்தபோதும் ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒரு இலட்சத்து 95 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இஸ்...

இலங்கையர் ஒருவர் வான்வழித் தாக்குதல்களில் சிறு காயங்களுக்கு உள்ளானதாக இஸ்ரேலுக்கான இலங்கைத்தூதர் நிமல் பண்டாரா உறுதிப்படுத்தியுள்ளார்.

காயமடைந்த நபர் கடவத்தையைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் வடக்கு இஸ்ரேலில் பராமரிப்பாளராகப் பணிபுரிகிறார்.

அவரது உடல் நிலை குறித்து மேலதிக விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. (ம-7)

## பொருளாதார...

பொருளாதார மையங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

தாக்குதல்கள் தொடர்ந்தால் இந்தக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை ஜெனரல் இப்ராஹிம் ஜப்பாரி எச்சரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் பிரதான மையங்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தத் தீர்மானித்தால், அதற்குப் பதிலடியாக பிராந்தியத்தின் அனைத்து பொருளாதார மையங்களும் இலக்கு வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை ஏற்கெனவே 80 டொலர்களைக் கடந்துள்ள நிலையில், இது விரைவில் 200 டொலர்களை எட்டக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2026.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் 6122

ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: T 9 7 3 0 4 3

அத சம்பத: T 3 0 4 3 | சீட்டிழுப்பு இலக்கம் 0697

### சுப தவசக

திகதி 2026.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் 0238

வெற்றி இலக்கங்கள்: மேடம் 03 11 29 | 7150

### தன நிதானய

திகதி - 2026.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் - 2152

Y 21 28 54 71 Y

### மெகா பவர்

திகதி 03/03/2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2470

O 04 31 35 37 71

### ஜய

திகதி 2026.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் 0390

Z 6 7 5 6

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4364 | சீட்டிழுப்பு திகதி 03.03.2026

I 08 23 41 46 | I

தேசிய லொத்தர் சபை

### ஹந்தஹன HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2026.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் 1431

சிம்மம் 06 25 35 56 சிம்மம்

### சுபிரி வாசனா

உத்தியோகபூர்வ முடிவுகள் 03.03.2026 | வெற்றி வாரம் 0830

ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 4 6 2 0 7 0

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,739,270.00

DLB

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 3096 | சீட்டிழுப்பு திகதி 2026.03.03 | தினம் செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 04 36 47 50 H

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.103,549,980.80

### சனிதா

திகதி 03.03.2026 | வெற்றி வாரம் 5257

வெற்றி இலக்கங்கள்: 16 35 46 71 S

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,424,958.40

### சசிரி

வெற்றி வாரம் 926 | சீட்டிழுப்பு திகதி 03.03.2026 | செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 15 39 41

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,155,760.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4808 | சீட்டிழுப்பு திகதி 03.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 10 47 51 54 | விருச்சிகம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,607,686.80

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

F 09 12 38 65 73

2272 | 03.03.2026

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.171,877,388.00

### அத கோடிபதி ADA KOTIPATHI

செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் : 2922 | சீட்டிழுப்பு திகதி : 2026.03.03

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.96,331,420.00

வெற்றி இலக்கங்கள்: 26 30 32 56 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், Bsc Engineering (Australia), Engineer, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55831)
02. காரைநகர், இந்து, 1986, மகம், Bsc, MBA, Phd, Lecture, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (36878)
03. கந்தரோடை - கட்டுவன், இந்து, 1991, ரோகிணி, Bsc in civil Engineering, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57742)
04. அளவெட்டி - வட்டுக்கோட்டை, இந்து, 1992, மகம், Msc in project management, Business, managing director, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54213)
05. யாழ். Town - கரவெட்டி, இந்து, 1988, ரோகிணி, Project manager(CPPM) management Accountant, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (31457)
06. புங்குடுதீவு, இந்து, 1994, ஆயிலியம், Master, Own Business, France citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57733)
07. மட்டுவில் - தெல்லிப்பளை, இந்து, பூரம், 1987, Graduated in(MA)marketing in (UK), Manager, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (22905)
08. அராலி - அச்சுவேலி, இந்து, 1997, சுவாதி, Bsc Electrical and Electronic Engineering, Electronical, Engineer and consultant, Netherlands citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57345)
09. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Msc (UK) civil Engineering, Civil Engineer, New zealand citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52796)
10. அளவெட்டி - மானிப்பாய், இந்து, மகம், MBBS - Government Hospital Doctor, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30453)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(C-5116)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193

## வேலையாட்கள் தேவை

இருபாலையில் போட்டோக்கொப்பிக் கடையில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.

076 311 9485

(6677)

## TECNO WORLD
### தொழில் நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

## A/L 2028

A/L தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 07.03.2026 (சனிக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி

A/L 2026, 2027 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு :
077 017 5346

(C-5117)

## A/L - 2028
(கலை, வர்த்தகம்)

மார்ச் - 07
காலை - 09.00

## DMI JAFFNA

077 848 0604

(C-5115)

## ஈரானில் நிலநடுக்கம்

கடுமையான போர் காரணமாக ஈரானில் கடுமையாகச் சேதமடைந்துள்ள நிலையில், அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி நிலநடுக்கம் ரிக்டரில் 4.3ஆகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் தெற்கு ஈரானில் உள்ள கெராஷ் பகுதியில் ஏற்பட்டதாகவும் இது பூமியில் இருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும்விடுக்கப்படவில்லை.(ம)

## A/L விவசாய விஞ்ஞானம்

2026, 2027, 2028 Batches

உயிரியல், கலை, தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் (யாழ், கிளிநொச்சி மாவட்டங்கள்)

V.Sasi Sir
தொடர்புகளுக்கு :
074 213 1729

(2109)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5113)

076 825 7716 (ஆகாஸ்)

## DCM யாழ்.நகர்

A/L 2028

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 07.03.2026
காலை 8.00 மணி (சனி)

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம் : 077 778 9815

(C-5114)

## மரண அறிவித்தல்

பிறப்பு
1961 - 09 - 18



இறப்பு
2026 - 03 - 03

### சின்னத்தம்பி அரியராசா (இந்திரன்)

வராஹி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அரியராசா(இந்திரன்) அவர்கள் நேற்று 03.03.2026 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சற்குணதேவி அவர்களின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன், பாலேஸ்வரன், லக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் துர்க்காயினி, தர்சா, அஜித்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி, பரமேஸ்வரி(குஞ்சு) மற்றும் சின்னக்கிளி, யோகராசா, ராசாத்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெயசிறிதேவி, அண்ணாத்துரை, சித்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சதுர்சன், கபிசன், அக்சிதா, மைஸ்னவி, தர்ணிகா, சர்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.03.2026 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வராஹி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(6978)

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

076 889 1308
077 606 1333

(6964)

## மணமக்கள் தேவை

யாழ். கத்தோலிக்க 1989 இல் பிறந்த மணமகளுக்கு மணமகனும் 1986 இல் பிறந்த யாழ். கத்தோலிக்க மணமகனுக்கு மணமகளும் தேவை.

தொடர்பு:
077 008 3491

(6975)

## K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

## A/L - 2028 வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் : 06.03.2026
வெள்ளி 03.00 pm

| | |
|---|---|
| பொருளியல் | : S.Jeyakumar |
| கணக்கீடு | : A.T.Suren |
| வணிகக்கல்வி | : T.S.Richi |

தொடர்பு : 077 723 8597

(6967)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org